செய்தி வெளியீடு எண்:806 நாள்:29.09.2021

## செய்தி வெளியீடு

## முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 130–வது பிறந்த நாள் விழா

முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 130–வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தங்கசாலை சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு இன்று (29.09.2021) காலை 10.00 மணியளவில், தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர் பாபு அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள், திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செயலாளர், தமிழ் வளர்ச்சித் துறை, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐட்ரீம் இரா.மூர்த்தி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு மலர்த் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

முன்னாள் சென்னை மேயர் சிவராஜ் அவர்கள் 1892ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29 ஆம் நாள் பிறந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் உயர்கல்விப் பயின்று 1916 ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வழக்குரைஞரானார். அதனையடுத்து, சென்னை மற்றும் அண்ணாமலை உள்ளிட்ட பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றினார். ஆதிதிராவிட மகாஜன சபை, நீதிக் கட்சி, பெரியாரின் சுயமரியாதை இயக்கம் ஆகிய இயக்கங்களில் இணைந்து பணியாற்றி சாதி ஒழிப்பு, இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டார். தனது வாழ்நாள் முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காக கடுமையாக உழைத்தவரவர்.

சென்னை மாகாண சட்ட மேலவை உறுப்பினராக 1926 முதல் 1937 வரை செயல்பட்டார். பின்னர் 1945 – 1946 ஆம் ஆண்டுகளில் சென்னை மாநகரத்தின் மேயராகவும் விளங்கினார். ஆதிதிராவிட சமுகத்தைச் சார்ந்த முதல் மேயர் என்ற பெருமை இவருககு உண்டு. நமது நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராக 1957 – 1961 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். அண்ணல் அம்பேத்கர் அவர்களின் மறைவுக்குப் பின் இந்திய குடியரசுக் கட்சியின் தலைவராகவும் விளங்கினார்.

முன்னாள் சென்னை மேயர் சிவராஜ் அவர்கள் கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்கு அரும்பாடுபட்டவர். மாநகராட்சிப் பள்ளியில் அனைத்துத் தரப்பினரும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களும் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புகிறார்களா என்பதை கண்காணிப்பதற்கு நான்கு

தனி அலுவலர்களை நியமித்து, தாழ்த்தப்பட்ட மக்களின் கல்விக் கண்களை திறந்து வைத்தவர்.

அன்பு நெறியைத் தனது வாழ்வியல் நெறியாக கடைப்பிடித்து தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காக பாடுபட்ட அன்னார் அவர்கள் 1964 செப்டம்பர் 29 அன்று இயற்கை எய்தினார். அன்னாருடைய அருமைப்பெருமைகளை போற்றுகின்ற வகையில் அவரின் பிறந்த நாளானது அரசு விழாவாக அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9